DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.186/2020**

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 22- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | செல்வகணேஷ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செங்கமலை | சமயம் | - | |
| கிராமம் | - | ஆனைமுடி எஸ்டேட் | வயது | - | 48/2025 |
| சாதி | - | | | | |

**<u>22-07-2025</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>**

ஆஜர் எதிரிதான் பிரபு என்பவர்ராவார். ஆஜர் எதிரிதான் உதயசூரியன் உதவி ஆய்வாளரை கீழே தள்ளிவிட்டவர். எதிரி தள்ளிவிட்டதில் உதவி ஆய்வாளர் கீழே விழுந்ததில் தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. காவல் நிலையத்திற்கு நானும், வெள்ளைச்சாமி, மணிகண்டன் மற்றும் பால்சாமி ஆகியோர்கள் சென்றிருந்தோம். போலீசார்கள் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவதினத்தன்று நான் ஆனைமுடி எஸ்டேட்டில்லிருந்து வந்தேனா என்றால் இல்லை கடையில் தான் இருந்தேன். முதல் நாள் இரவு வந்து அங்கு தங்கியிருந்தேன். யார் யார் கறிக்கடையில் இருந்தது என்றால் நானும், வெள்ளைச்சாமி, மணிகண்டன் மற்றும் பால்சாமி ஆகியோரும் கறிக்கடையில் வேலைசெய்யும் ஹிந்தி பசங்களும் இருந்தார்கள். கடையில் கேமரா இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி கடையிலும் கேமரா இருந்தது. கடைக்கு நான் எத்தனை மணிக்கு வேலைக்கு வந்தேன் என்றால் காலை 04.00, 05.00 மணிக்கு வந்தேன். காவல் நிலையத்திற்கு என்னை யார்அழைத்து சென்றது என்றால் எனது தம்பி வெள்ளைச்சாமி அழைத்து சென்றார். எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றோம் என்றால் காலை 07.00 மணியளவில் சென்றோம். அதற்கு பின்பு நாங்கள் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் 07.00 மணிக்கு சென்று மதியம் 12.00 மணி வரை காவல் நிலையத்தில் இருந்தோம். நாங்கள் காவல் நிலையம் சென்றிருந்த நேரம் எனது தம்பி கடையில் கல்லாவில் யார் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னை கல்லாவில் உட்கார அனுமதிப்பார்களா என்றால் இல்லை. எனது தம்பி குடும்பத்தார்தான் இருப்பார்கள். எந்த தேதியில் எத்தனை மணிக்கு எந்த போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எந்த போலீசார் வந்து ஓடிவந்து தடுத்தார்கள் என்றால் அவர் பெயர் தெரியவில்லை. நானும், வெள்ளைச்சாமி, மணிகண்டன் மற்றும் பால்சாமி அனைவரும் எங்களுக்கு உறவினர்கள் என்றால் பெரியப்பா,சித்தப்பா பிள்ளைகள் ஆவார்கள். நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லைஎன்றாலும், நான் வெள்ளைச்சாமியிடம் சம்பளத்திற்கு வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக இதற்கு முன்பு ஒரு வழக்கில் சாட்சி சொல்லியும் இந்த வழக்கிலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.